வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 01.05.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 115 பக்கங்கள் : 08




## செம்மணி அகழ்வை தொடர்வதா? ஸ்கான் முடிவுகளின் பின்பே முடிவு

### சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா



யாழ்ப்பாணம், மே. 01

"செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைத் தொடர்வதா இல்லையா என்பது, தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள என்புத் தொகுதிகளை முழுமையாக அகழ்ந்து எடுத்த பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள புதிய ஸ்கான் பரிசோதனையிலேயே தீர்மானிக்கப்படும்" என்று சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக முன்னிலையாகும் அவர், ஜி.பி.ஆர். ஸ்கான் பரிசோதனை மற்றும் அகழ்வுப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து ஊடகங்களுக்கு மேலும் கூறுகையில்-

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் குழுவின் உதவியுடன், சித்துப்பாத்தி இந்து மயானத்தின் ஒரு பகுதியில் ஜி.பி.ஆர். ஸ்கான் பரிசோதனைகள்

07

## என்.பி.பியின் ஆட்சியிலும் எந்த மாற்றமும் இல்லை!

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே. 01

"இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் இனவாதத்தையே மூலதனமாகக் கொண்டுள்ளன." என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, சோரன்பற்று பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து அவர் தெரிவிக்கையில்-

அரசு கொள்வனவு செய்த நிலக்கரியின் எரிபற்று நிலை வெறும் 20 வீதமாகவே உள்ளது. இதனால் இயந்திரங்கள் பழுதடைந்து நாட்டுக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டத்தை மக்களிடமே அரசு அறவிடப் போகின்றது.

மத்திய வங்கியில் 25 மில்லியன் டொலர் காணாமல் போயுள்ளது. 15 உயர்மட்ட அதிகாரிகள் கையெழுத்திட்ட பின்னரே இந்த நிதி எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஊழல்கள் தொடரும் வரை இலங்கை ஒருபோதும் முன்னேறப் போவதில்லை." - என்றார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிக்குகள் போதைப்பொருளுடன் கைதான சம்பவம்

07

## செம்மணி மனிதப் புதைகுழியில் 240 என்புக்கூட்டு தொகுதி அகழ்வு

யாழ்ப்பாணம், மே. 01

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியில் நேற்று வியாழக்கிழமை ஒரு மனித என்புக் கூட்டு தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் இது வரையான காலப்பகுதியில் செம்மணி மனித புதைகுழியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித என்புக் கூட்டு தொகுதிகளின் எண்ணிக்கை 240ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளின் நான்காம் நாள் அகழ்வு பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. இதன் போது ஒரு மனித என்புக் கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டு

07

## ரஷ்ய சுகாதார அமைச்சர் 3 ஆம் திகதி இலங்கைக்கு!

கொழும்பு, மே. 01

ரஷ்ய சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோ தலைமையிலான உயர்மட்ட இராஜதந்திரக் குழுவினர், நாளை மறுதினம் 3 ஆம் திகதி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான சுகாதாரத் துறை உறவுகளை வலுப்படுத்துவது குறித்துச் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸவுடன் விசேட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

07

## கிளிநொச்சியில் மினி சூறாவளி!

கிளிநொச்சி, மே. 01

கிளிநொச்சியில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக, சந்தை வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.

மழை காரணமாக, கரைச்சி பிரதேச சபைக்குரிய பரந்தன் பொதுச் சந்தையின் மரக்கறி

07

ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் திருப்பம்

## ஆஸாத் மௌலானாவை விசாரிக்க ஷானி அபேசேகர பிரான்ஸ் பயணம்

கொழும்பு, மே. 01

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று பிரான்ஸ்/க்குப் பயணம் மேற்கொண்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு வட்டாரங்களின் தகவல்படி, இந்தப் பயணத்தின் முக்கிய விவரங்கள் வருமாறு:-

07

## 2.5 மில்லியன் டொலர் மாயம் 5ஆம் திகதி விசேட அறிக்கை!

கொழும்பு, மே. 01

காணாமல் போனதாகக் கூறப்படும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவகாரம் தொடர்பாக, நிதியமைச்சு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த விசேட அறிக்கையை நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த பண விவகாரம் தொடர்பில் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரிடமும் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

## அராலியில் பெண்ணின் சடலம் தீயில் கருகிய நிலையில் மீட்பு!

யாழ்ப்பாணம், மே. 01

அராலி தெற்கு பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரது சடலம் தீயில் கருகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, களுவத்துறை பகுதியைச் சேர்ந்த கைலாயப்பிள்ளை கமலேஸ்வரி (வயது 79) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் இரண்டு பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். அவர் பணிப்பெண் மூலம் பராமரிக்கப்பட்டு

07

## உழைப்பாளர்களுக்கு அநீதி இழைத்த அரசு!

### சாடுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே. 01

தற்போதைய அரசாங்கம்தான் வரலாற்றில் உழைப்பாளர்களுக்கு பெரிதும் அநீதி இழைத்த அரசாங்கமாக உள்ளதாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கட்சிக் காரியாலயத்தில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

07

## அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி விடுதலை நோக்கி ஒன்றிணைவோம்

### கடற்றொழில் அமைச்சர் அழைப்பு

யாழ்ப்பாணம், மே. 01

"பாட்டாளி வர்க்கத்தின் வியர்வை, தியாகம், மற்றும் உழைப்பால் கட்டியெழுப்பப்பட்ட இந்த உலகில், தொழிலாளர்களின் நலன் குறித்து வெறும் வார்த்தைகளில் மட்டுமே பேசிக்கொண்டிருக்கவில்லை. அதை செயல் முறையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிரூபித்து வருகின்றது என மே தின வாழ்த்துச் செய்தியில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினரும், கடற்றொழில் அமைச்சருமான

07

## கனடா நாட்டு பிரஜை வவுனியாவில் மரணம்!

### பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, மே. 01

வவுனியாவுக்கு வருகை தந்து தற்காலிகமாக வசித்து வந்த கனடா நாட்டுப் பிரஜை ஒருவர், சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கனடா, ரொறன்ரோ பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய மனோகரன் பொன்னையா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

# இலங்கை ஏற்றுமதிச் சந்தையை விரிவாக்க 100 மில்லியன் டொலர்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது

கொழும்பு, மே. 01

இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையை விரிவாக்கம் செய்வதற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக நிதியுதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி நடைமுறைகளை நேரில் ஆராய்வதற்காக நாட்டுக்கு வருகை தந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட பிரதிநிதிகள் குழுவினருக்கும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும் இடையிலான சந்திப்பின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஏற்றுமதித் துறையில் பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதற்கும், சர்வதேச சந்தையில் இலங்கை தயாரிப்புகளுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, இலங்கையின் தேசிய ஏற்றுமதி பொறிமுறையை வலுப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்க உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிப்பதற்கான புதிய வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# இணையப் பாதுகாப்பு அதிகார சபை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே. 01

இலங்கையில் தேசிய இணையப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையை நிறுவுவதற்கான புதிய சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சு இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண சிறீ தனபால, இந்தச் சட்டமூலத்தை இறுதி செய்யும் பணிகளில் டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் இலங்கை கணினி அவசரப் பதிலளிப்புப் பிரிவு ஆகியன சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இன்னும் இரண்டு முதல் மூன்று மாத காலப்பகுதிக்குள் இந்தச் சட்டமூலத்தின் வரைவுப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மைக் காலமாக அதிகரித்து வரும் இணையவழித் திருட்டுகள் மற்றும் தரவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்த இந்தப் புதிய அதிகாரசபை ஒரு முக்கிய அரணாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# 625,000 அமெரிக்க டொலர் நிதி மாயம் இணையத் தாக்குதல் நடந்திருக்கலாம்

## தபால் மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, மே. 01

அமெரிக்க தபால் சேவைக்கு வழங்கப்படவேண்டிய சுமார் 6 இலட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க டொலர் நிதி மாயமானது தொடர்பாக, "பிஷிங்" எனப்படும் இணையவழித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக தபால் மா அதிபர் ஆர்.பி.சத்குமார தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், குறித்த நிதி வழங்கப்பட்ட போதிலும் அது தமக்குக் கிடைக்கவில்லை என அமெரிக்க தபால் சேவை அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி, மின்னஞ்சல் ஊடாக வங்கிக் கணக்கு விவரங்கள் மாற்றப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைக்கப்பெற்றபோதிலும், குறித்த வங்கிக் கணக்கு தற்போது செயலிழந்துள்ளதாக வங்கித் தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது.



இந்தச் சம்பவம் ஒரு திட்டமிட்ட இணையவழி மோசடி என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதால், தபால் திணைக்களம் இது குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

அதேவேளை, திணைக்களத்திற்குள் உள்வாரி விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தகவலை வெளியிட்டிருந்த நிலையில், தற்போது இது குறித்த மேலதிக உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

(அ)

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்குள் குருந்தூர்மலை விகாராதிபதி எதற்கு?

## காணி உரிமையாளர்கள் கேள்வி

யாழ்ப்பாணம், மே. 01

சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிப்பதற்காக என நடைபெறும் கூட்டங்களுக்கு காணி உரிமையாளர்கள் ஆகிய எங்களை அழைப்பதில்லை. அங்கே என்ன கதைத்தார்கள் எனச் சொல்வதில்லை. கூட்ட அறிக்கைகள் கேட்டால் அவற்றை எமக்கு தருவதில்லை எனக் காணி உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தையிட்டி விகாரைக்குள் குருந்தூர்மலை விகாராதிபதி காணப்பட்டார். அவர் ஏன் அங்கே வந்தார் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர்கள்,

கடந்த 11ஆம் திகதி காணி அளவீடு செய்யப்போதாக மாவட்ட செயலகத்துக்கு எம்மை அழைத்துக் கூட்டம் நடத்தினார்கள்.

அந்த அறிக்கையை கேட்டால், அது கூட்டமில்லை கலந்துரையாடல். அதற்கு அறிக்கை எழுதவில்லை என்கின்றனர்.

சில நாள்களுக்கு முன்னர் நடந்த கூட்டத்தையே கூட்டம் இல்லை என்கின்றனர்.

காணி அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்க இருந்த அன்றைய தினம் விகாரைக்குள் குருந்தூர்மலை விகாராதிபதி காணப்பட்டார். அவர் ஏன் அங்கே வந்தார்? அவர் எப்படிப்பட்டவர் என எல்லோருக்கும் தெரியும்.

நாம் கொழும்பில் இருந்து வந்த திணைக்கள அதிகாரிகளிடம் உறுதிமொழி கேட்கவில்லை. அவர்களை யார் என்றே எமக்கு தெரியாது.

நாம் எமது மாவட்ட செயலரோ அல்லது தெல்லிப்பளை பிரதேச செயலரோ தமது அலுவலகக் கடிதத் தலைப்பில் அதனை எழுதி தரச் சொல்லியே கேட்டோம்.

அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. ஏனெனில், அவர்களுக்கே காணிகளை அளந்த பிறகு என்ன நடக்கும் எனத் தெரியாது என்பதால் தான்அவர்கள் அவ்வாறு தர மறுத்த னர்.

அன்றைக்கு அவர்கள் எங்களுக்கு தந்த கடிதம் உத்தியோகபூர்வ கடிதமாக எந்தத் திணைக்கள கோவைக்குள்ளும் இருக்காது.

அந்தக் கடிதம் எம்மிடம் மட்டுமே இருக்கும். அரச ஆவணமாக திணைகள கோவைகளுக்குள் அந்தக் கடிதம் இருக்காது.

அதனால் தான் நாம் கடிதத் தலைப்பில் கடிதம் கேட்டோம். அவ்வாறு தந்தால் தான் அது ஒரு ஆவணமாக கோவைக்குள் இருக்கும்.

கடிதத்திற்கு என தொடர் இலக்கம் இருக்கும். அவ்வாறான கடிதமே சட்ட ரீதியான ஆவணமாக இருக்கும்-என்றனர்.

(அ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை சீரமைக்க 3 மாதங்களுக்குள் நடவடிக்கை

கொழும்பு, மே. 01

சிறீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான இறுதித் தீர்மானம் இன்னும் இரண்டு முதல் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்படும் என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு, தற்போது சிறீலங்கன் எயார்லைன்ஸ் 23 விமானங்களுடன் இயங்கி வருகின்ற போதிலும், மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக நிதிப்புழக்கத்தில் சவால்களை எதிர்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை தொடர்ந்தும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே வைத்திருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் உள்நாட்டு முகாமைத்துவத்தில் பாரிய சீர்திருத்தங்களைக் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நீண்ட காலமாகக் குவிந்துள்ள கடன் சுமை காரணமாக நிறுவனம் நட்டத்தில் இயங்குவது போல் தோன்றினாலும், அதன் நாளாந்த செயல்பாடுகள் லாபகரமானதாகவே அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, கடந்த ஜனவரி மாதத்தில் நிறுவனம் செயல்பாட்டு ரீதியான லாபத்தைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுற்றுலா மற்றும் வர்த்தகத் துறையில் சிறீலங்கன் எயார்லைன்ஸ் கொண்டுள்ள முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அதன் கடன் சுமைகளைச் சீர்செய்து நிறுவனத்தை வலுப்படுத்தத் தேவையான ஆய்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# நெடுந்தீவு சமுத்திர தேவாவை புனரமைக்க ரூ. 2.6 மில்லியன்!

யாழ்ப்பாணம், ஏப். 01

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் சேவையில் ஈடுபடும் சமுத்திர தேவா படகை புனரமைக்க 2.614 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், அதனை புனரமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் வர்த்தக வாணிப அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் தலைமையில் நடைபெற்றபோதே அதிகாரிகளுக்கு அவர் இவ்வாறு பணித்துள்ளார்.

குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான சமுத்திரதேவா பயணிகள் படகு நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்நிலையில் படகை திருத்தம் செய்வதற்கு, 2.614 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ,உடனடியாக படகைப் புனரமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஆளுநர் பணித்துள்ளார்.

(அ)

# மறைந்த தேனிசை செல்லப்பாவுக்கு ஜனநாயகப் போராளிகள் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே. 01

தமிழ்நாட்டு பாடகர் மறைந்த தேனிசை செல்லப்பாவுக்கு, ஜனநாயகப் போராளிகள் கட்சியினால் வடமராட்சி கிழக்கு மணல்காடு கிராமத்தில் நேற்று முன் தினம் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயக போரளிகள் கட்சியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் அகஸ்டின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதல் நிகழ்வாக ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து தேனிசை செல்லப்பா நினைவாக மரக்கன்றும் நாட்டிவைக்கப்பட்டது.

நிகழ்வில் ஜனநாயக போரளிகள் கட்சி உறுப்பினர்கள், கிராம மக்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
01.04.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அர்த்தத்தை இழந்த மே தினம்

இன்று மே தினம்.140 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் தினமொன்றுக்கு 8 மணிநேர வேலை கோரிப் போராடிய தொழிலாளர் வர்க்கத்தின் இரத்தத்திலும் வியர்வையிலும் பிறந்த இந்த சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் ஒருமைப்பாட்டுத் தினம் அதன் அடிப்படை அர்த்தத்தை இழந்து ஒவ்வொரு கட்சியும் அதன் அரசியல் நலன்கள் சார்ந்த நிலைப்பாடுகளை பிரசாரப்படுத்துவதற்கு களம் அமைக்கும் தினமாக மாற்றப்பட்டிருப்பதை காணக்கிறோம்.

உலகம் பூராவுமுள்ள தொழிலாளர்கள் பொருளாதார, அரசியல் விடுதலைக்கான போராட்டங்களில் தங்களை மேலும் கூடுதலான உறுதிப்பாட்டுடன் அர்ப்பணிப்பதற்கான மேதினம் இலங்கையில் வெறும் அரசியல் பிரசார மேடைகளுக்கான இன்னொரு வசதியான சந்தர்ப்பமாக மாறிவிட்டது.

தொழிலாளர் வர்க்கம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான அடிப்படை அரசியல் காரணிகளை வர்க்க உணர்வுடன் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு கோட்பாட்டு அடிப்படையில் தொழிற்சங்கங்களை அரசியல்மயப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட காலகட்டம் ஒன்று இருந்தது. இன்று அந்த நோக்கத்துக்கு முற்றிலும் மாறாக தொழிற்சங்கங்கள் “கட்சி அரசியல்” மயமாகியிருப்பதைக் காண்கிறோம்.

இன்று வெசாக் பௌர்ணமி தினம் என்பதால் மத அனுஷ்டானங்களில் ஈடுபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி பெரும்பாலான அரசியல் கட்சிகள் மேதின ஊர்வலங்களையும் பேரணிகளையும் நடத்துவதை தவிர்த்து விட்டன. ஆளும் தேசிய மக்கள் சக்தி உட்பட வேறு சில கட்சிகள் பேரணிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றன. வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும் தமிழ் அரசியல் கட்சிகளும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகளை நடத்துகின்றன. தேசிய மக்கள் சக்தி வடக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் 21 பேரணிகளை ஏற்பாடு செய்திருக்கிறது.

பழைய இடதுசாரிக் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் பிரமாண்டமான மேதினப் பேரணிகளை வீறுடன் நடத்திய காலம் ஒன்று இருந்தது. அந்த இடதுசாரிக் கட்சிகள் அவற்றின் சந்தர்ப்பவாத அரசியல் காரணமாக மக்கள் ஆதரவை இழந்த பிறகு அவற்றின் இடத்தைப் பிடித்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கட்டுக்கோப்பான முறையில் மகத்தான ஊர்வலங்களையும் பேரணிகளையும் நடத்துவதில் பெயரெடுத்தது. தற்போது அது ஆளும் தேசிய மக்கள் சக்தியாக வேறு ஒரு அவதாரத்தில் இரண்டாவது வருடமாக மேதினத்தைக் கொண்டாடுகிறது.

அரசாங்கங்களுக்கு எதிராக மக்களை பெருமளவில் அணி திரட்டுவதற்கான ஒரு முக்கியமான- தவறவிடக்கூடாத சந்தர்ப்பமாக எதிரணி அரசியல் கட்சிகள் கூட்டாக மேதினத்தைப் பயன்படுத்துவது காலங்காலமாக வழமையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், இன்று எதிரணியில் இருக்கும் பழைய பாரம்பரிய அரசியல் கட்சிகள் மிகவும் பலவீனப்பட்டிருக்கும் நிலையில் அவற்றினால் ஐக்கியப்பட்டு மக்களை பெரியளவில் அணி திரட்ட முடியாமல் இருக்கிறது. அத்தகைய பலவீனமான நிலையை மறைப்பதற்கும் வெசாக் பௌர்ணமி தினத்தை காரணமாகக் கூறி மே தின மேதினக் கொண்டாட்டங்களை தென்னிலங்கையில் பல்வேறு கட்சிகள் தவிர்க்கின்றன என்பதும் உண்மை.

“உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் ” என்ற முழக்கத்தைச் செய்து கொண்டு அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் பல்வேறு பிரிவுகளாக வெவ்வேறு இடங்களில் ஊர்வலங்களையும் பேரணிகளையும் நடத்துவதே பல தசாப்தகால வரலாறாக இருந்துவருகிறது. தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றுபடுத்தும் இலட்சணம் இதுதான்.

### நிதி அமைச்சின் செயலாளர் பதவிக்கு

# தகுதியற்றவரை நியமித்ததே பல மோசடிகளுக்கு காரணம்

கொழும்பு, மே 01

அரசாங்கம் தனது பொறுப்புக்களில் இருந்து நழுவி, நிதி மோசடிகள் தொடர்பான பழியை அதிகாரிகள் மீது சுமத்தித் தப்பிக்க முயல்கிறது. குறிப்பாக, போதிய அனுபவமில்லாத ஒருவரை நிதி அமைச்சின் செயலாளராக நியமித்த ஜனாதிபதியின் அரசியல் தீர்மானமே தற்போதைய நிதி நெருக்கடிகளுக்குக் காரணம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“நாட்டில் தற்போது நடைபெறும் விடயங்கள் எமக்கே புரியாத வகையில் குழப்பமாக உள்ளன. அரசாங்கம் சகல பிரச்னைகளையும் அரச அதிகாரிகள் மீது சுமத்திவிட்டுத் தப்பிக்க முயல்கிறது.

அவ்வாறு எதனையும் அறியாதவர்கள் போல அரசாங்கம் செயல்பட முடியாது. எதிர்க்கட்சியில் இருந்தபோது சகல விடயங்கள் குறித்தும் அறிவுரை வழங்கியவர்கள், இன்று ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் நிலைமையை மென்மேலும் சிக்கலாக்கி வருகின்றனர்.”- என்றும் அவர் கூறினார்.

(எ)

# இந்தியாவில் டிஜிற்றல் மோசடிகளால் 25 பில்லியன் டொலர் இழப்பு

புதுடில்லி, மே 01

2025 ஆம் ஆண்டில் மட்டும் டிஜிற்றல் நிதி மோசடிகளால் இந்தியர்களுக்கு 25 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான பாரிய தொகை இழப்பு ஏற்பட்டுள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4,300 சதவீத அதிகரிப்பாகும் என்பதுடன், சுமார் 2.5 மில்லியன் மக்கள் இவ்வாறான மோசடிகளுக்குப் பலியாகியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையைக்கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்கள் பெரும்பாலும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களைப் போன்ற போலி இணைப்புகளை குறுஞ்செய்திகள் ஊடாக அனுப்பி வருகின்றனர்.

உதாரணமாக, போக்குவரத்து அபராதங்களைச் செலுத்துமாறு கோரி அனுப்பப்படும் செய்திகளில் உள்ள இணைப்புகளைப் பயன்படுத்தி பணம் செலுத்த முற்படும்போது, வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் திருடப்படுகின்றது.

உளவியல் ரீதியாக ஒருவரை அச்சப்படுத்தியோ அல்லது அவசர நிலையை ஏற்படுத்தியோ இவ்வாறான மோசடிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், சட்டங்களினால் மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது என்றும், இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல்களுடன் நுகர்வோர் விழிப்புணர்வையும் அதிகரிக்க வேண்டுமென நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(எ)

# நாட்டின் பல பகுதிகளில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, மே 01

நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியு டன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

அத்துடன், தென் மாகாணத்திலும் களுத்துறை மாவட்டத்திலும் சில இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படலாம் என எதிர்ப்பார்க்கப் படுகிறது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.(எ)

# ஏப்ரலில் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, மே. 01

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் படி, இலங்கையின் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி, 2026 மார்ச் மாதத்தில் 2.2 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம், 2026 ஏப்ரலில் 5.4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம், ஏப்ரல் மாதத்தில் 2.8 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

மேலும், மார்ச் மாதத்தில் 2.9 சதவீதமாகக் காணப்பட்ட உணவு அல்லாத பணவீக்கம், ஏப்ரல் மாதத்தில் 6.8 சதவீதம் வரை சடுதியாக உயர்வடைந்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் பொருட்களின் கேள்வி அதிகரித்தமை மற்றும் ஏனைய பொருளாதாரக் காரணிகளே இந்த அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளதாகப் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக்கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**துலாம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**தனுசு**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பொறுமை தேவை.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

### பயணிகளுக்கு அசௌகரியம்:

# நான்கு தனியார் பஸ்களின் வழியனுமதிப்பத்திரம் ரத்து

வவுனியா, மே 01

வடக்கு மாகாணத்தில் பயணிகளுக்கான சேவையை முன்னறிவித்தலின்றி இடைநிறுத்தி, பொதுமக்களுக்கு மிகப் பெரிய அசௌகரியங்களை ஏற்படுத்திய வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு தனியார் பஸ்களின் வழியனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சூ. விமலேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா பஸ் நிலையத்தில் குறித்த தனியார் பஸ்கள் தமக்குரிய சுழற்சி முறை இருந்தும், அதிகார சபைக்கு எந்தவித முன்னறிவித்தலுமின்றித் தமது சேவையைத் தன்னிச்சையாக இடைநிறுத்தின. இதனால், பஸ் நிலையத்தில் காத்திருந்த பெருமளவான பயணிகள் ஒரு நாள் முழுவதும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதுடன், அதிக கட்டணங்களைச் செலுத்தி மாற்றுத் தனியார் வாகனங்களில் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பயணிகளை நடுத்தெருவில் விட்ட இந்தப் பொறுப்பற்ற செயல் தொடர்பில் அதிகார சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக பின்வரும் கடுமையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டன.

முதற்கட்டமாக குறித்த பஸ் உரிமையாளர்களுக்கு தலா 3,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. பஸ்களின் வழியனுமதிப்பத்திரங்கள் 27.04.2026 முதல் 03.05.2026 வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

இந்தத் தடை நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில், குறித்த பஸ்களில் பதிவு செய்யப்பட்ட சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் வழியனுமதிப்பத்திரம் பெற்று சேவையில் ஈடுபடும் வேறு எந்தவொரு பஸ்களிலும் கடமையாற்றுவதற்கும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-10)

## பாதீனிய ஒழிப்பு திட்டத்தில் மானிப்பாய் பிரதேச சபை!



யாழ்ப்பாணம், மே 01

பாதீனிய ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று முன்தினம் மானிப்பாய் பிரதேச சபையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த சபை அமர்வில், உறுப்பினர் எஸ். வாகீசன் முன்வைத்த பாதீனியம் ஒழிப்பு தொடர்பான பிரேரணையானது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் ஆரம்ப கட்ட வேலைத்திட்டம் நேற்று முன்தினம் உயரப்புலம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வெட்டப்பட்ட பாதீனிய செடிகள் அந்த இடத்திலேயே போட்டு தீ வைத்து எரிக்கப்பட்டது.

இதில், மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் செஞ்சிலுவை சங்கத்தினர் ஆகியோர் இணைந்து கொண்டனர். (எ-05)

## ஊடகவியலாளர் தராகி சிவராமின் 21 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு



முல்லைத்தீவு, மே 01

சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராமின் 21 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு, முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மறைந்த ஊடகவியலாளர் தராகி சிவராமின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகச் செயல்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

## திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

### வவுனியாவில் பரபரப்பு சம்பவம்

வவுனியா, மே 01

வவுனியா, ஏ - 9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றது.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து ஏ- 9 வீதி ஊடாக சென்ற மோட்டார் சைக்கிள் தாண்டிக்குளம், முருகன் கோவிலடியை அண்மித்த போது திடீரென தீப்பற்றி எரிந்தது. இதனையடுத்து அதில் பயணித்த இரு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளை கீழே போட்டுவிட்டு தப்பினர்.

இதன்போது, அப்பகுதியில் நின்ற இளைஞர்கள், பொது மக்கள் இணைந்து, நீர் மற்றும் மண் என்பனவற்றை பயன்படுத்தி தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (எ-10)



## விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 01

விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார். பனிச்சங்குளம் - மாங்குளம் பகுதியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கண்ணன் (வயது- 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த 04ஆம் திகதி மல்லாவியில் இருந்து மாங்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றார். அவருக்கு முன்னால் ஒரு லொறி பயணித்துக் கொண்டிருந்தது. அந்த லொறி, வேகத்தை குறைத்ததும் அவர் அந்த லொறியுடன் மோதி விபத்தில் சிக்கினார்.

பின்னர் மாங்குளம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து 06ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளாதார மீட்சி நடவடிக்கைகளை திசை திருப்ப ஒரு தரப்பினர் முயற்சி

## அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது - ரில்வின் சில்வா

கொழும்பு, மே 01

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களின் சகாக்கள் தான் இன்று போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறானவர்களை ஒருபோதும் கண்டுகொள்ள போவதில்லை. திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியபெருமவுக்கு இரட்டை குடியுரிமை உள்ளது என்று ஊடகங்களில் குறிப்பிடுபவர்கள் நீதிமன்றத்தில் முறையிடலாம். பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை திசை திருப்பவே ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.



மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். 2022 ஆம் ஆண்டு மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர்களின் சகாக்கள் மக்களின் அரசியல் மாற்றத்தை விளங்கிக் கொள்ளவில்லை.

பல ஊழல் வழக்குகளுக்கு முகங்கொடுத்துள்ளவர்கள் இன்று எமது அரசாங்கத்தையும் ஊழல்மிக்கது என்று காண்பிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். பல போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

பத்து அல்லது பதினைந்து பேர் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் அரசியல் பின்னணியை முதலில் ஆராய வேண்டும். நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களின் சகாக்கள் தான் இன்று போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறானவர்களை ஒருபோதும் கண்டு கொள்ள போவதில்லை" - என்றார். (எ)

# பீடி இலைகள் கைப்பற்றல்

புத்தளம், மே 01

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகந்தவில கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை சிலாபம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது, சுமார் 250 கிலோ 900 கிராம் எடையுள்ள 06 பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

குறித்த பீடி இலைத் தொகுதி யாரால் கொண்டு வரப்பட்டது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், சிலாபம் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

மே தினத்தை முன்னிட்டு இன்று

# கொழும்பில் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத்திட்டம்

கொழும்பு, மே 01

இன்று சர்வதேச மே தினத்தை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளில் மே தினப் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதையொட்டி கொழும்பு நகரில் பொலிஸாரால் விசேட பாதுகாப்பும் போக்குவரத்துத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளன.

முக்கியமான கூட்டங்கள் மற்றும் பேரணிகள் கொழும்பு நகரை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ள அதேவேளை, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தின கூட்டங்கள், நிகழ்வுகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடத்தப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான மே தின நிகழ்வுகள் அமைதியான முறையில் நடைபெறுவதற்கான சூழலை உருவாக்குதல், பாதுகாப்பு வழங்குதல், போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றுடன், வழமையான வாகனப் போக்குவரத்துகளை சீராகப் பேணுவதற்கு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் நடைபெறும் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்குப் பொலிஸ் மா அதிபர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். (எ)

# எரான் விக்கிரமரத்ன அனைத்து பதவிகளில் இருந்தும் விலகினார்

கொழும்பு, மே 01

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, கட்சியின் செயற்குழு மற்றும் நிர்வாகக் குழுவிலிருந்து தனது இராஜினாமாவை கட்சிக்குத் தெரிவித்ததாக உறுதிப்படுத்தினார்.

சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் இடைக்கால ஆளுகைக் குழுவின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அதன் விவகாரங்களை வெளிப்படைத்தன்மையுடன் நடத்தவும் இந்த முடிவை எடுத்ததாக எரான் விக்கிரமரத்ன கூறினார். (எ)

# 994 கிலோ மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

புத்தளம், மே 01

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலவி பகுதியில், புத்தளம் பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சட்டவிரோதமான முறையில் வரியின்றி நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட மஞ்சளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 994 கிலோ 150 கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நுரைச்சோலை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பலாப்பழம் பறிக்க முயன்ற குடும்பஸ்தர் விழுந்து பலி!

கம்பளை, மே 01

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபிட்டிய பகுதியில், மரத்திலிருந்து விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் பதிவானது. மரத்திலிருந்து விழுந்து காயமடைந்த குறித்த நபர் கம்பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என்று கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சிங்கபிட்டிய பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

பலாப்பழம் பறிப்பதற்காக வீட்டின் முன்னால் இருந்த பலா மரத்தில் ஏறிய போது, அதிலிருந்து தவறி விழுந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### தாய்லாந்து போதைப்பொருள் கடத்தல்:

# பிரதான சூத்திரதாரிகளான இரு தேரர்களை கைதுசெய்ய இன்டர்போல் உதவி கோரிக்கை

கொழும்பு, மே 01

தாய்லாந்திலிருந்து சுமார் 110 கிலோ கிராம் போதைப் பொருட்களை கடத்தி வந்த 22 இளம் பிக்குகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்த நிலையில், இந்த போதைப்பொருள் வலையமைப்பின் பின்னணியில் பிரதான சூத்திரதாரிகளாக இரு தேரர்கள் உள்ளமை கண்டறியப் பட்டுள்ளது.

தம்மரத்ன மற்றும் புண்ணியரத்ன ஆகிய பெயர்களால் அறியப்படும் இந்த இரு தேரர்களும் தாய்லாந்தில் தங்கியிருந்தவாறு இந்த போதைப்பொருள் வலையமைப்பை முன்னெடுத்து வந்தமை இதுவரையிலான விசாரணையில் தெரியவந்துள்ளதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவியோடு இன்டர்போல் எனும் சர்வதேச பொலிஸாரை அணுகி குறித்த இருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகவும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் தகவல்கள் தெரிவித்தன. (எ)

# கிரிக்கெட் மறுசீரமைப்பு குழு தலைவராக எரான் பதவியேற்பு




கொழும்பு, மே 01

ஜனாதிபதி மற்றும் இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோரின் அழைப்புக்கு இணங்கவே, சிறிலங்கா கிரிக்கெட் மறுசீரமைப்பு குழுவின் தலைவராக பொறுப்பேற்றதாக எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அணித் தலைவர்களுடன் நடத்திய விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த பொறுப்பை ஏற்கத் தீர்மானித்ததாக எரான் விக்கிரமரத்ன விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அமைச்சர் விஜித ஹேரத்துடன் இஸ்ரேலியத் தூதுவர் சந்திப்பு



கொழும்பு, மே 01

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் ரூவன் ஜேவியர் அசார் ஆகியோருக்கு இடையில் புதன்கிழமை விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில், இலங்கை மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துதல், பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், இரு நாடுகளும் பயன்பெறக்கூடிய வகையில் தொடர்ச்சியான ஈடுபாடுகளை முன்னெடுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

பரஸ்பர நலன்களுக்காகவும், உறவுகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லவும் இஸ்ரேலுடன் இணைந்து செயல்பட எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

# மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட நாணய சபை பதவி விலகவேண்டும்

## மத்திய வங்கியே நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியது - ரவி கருணாநாயக்க

கொழும்பு, மே 01

திறைசேரியால் செலுத்தப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில் மத்திய வங்கி பொறுப்புக் கூற வேண்டும். மத்திய வங்கியின் நாணயச் சபை உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் பதவி விலக வேண்டும். மத்திய வங்கியை சுயாதீனமாக்கியதால் அதன் சேவையாளர்களின் சம்பளம் மாத்திரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு ஏதும் கிடைக்கவில்லை. எதிர்வரும் காலப்பகுதிகளில் பல மோசடிகள் வெளிவரும் என்று முன்னாள் நிதி அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"வாகன இறக்குமதி மீதான தடையை அரசாங்கம் தளர்த்தும் போது ரூபாய் மற்றும் டொலரின் கையிறுப்பை முதலில் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திடம் குறிப்பிட்டேன். தேவையான அளவு டொலர் மற்றும் ரூபாய் உள்ளது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடையாது என்று அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால், இன்று ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்து, டொலரின் பெறுமதியும் 323 ஆக உயர்வடைந்துள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கியின் உள்ளக மட்டத்தில் இடம்பெற்ற 13.2 பில்லியன் ரூபாய் மோசடி தொடர்பில் விளக்கம் கோருவதற்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள், அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அழைக்கப்படவுள்ளார்கள்.

திறைசேரியால் அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் ஹேக்கர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடுவதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு திறைசேரியின் ஐந்து அதிகாரிகள் பதவி நீக்கப்பட்டுள்ளனர். ஆனால், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் குறித்து எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை"- என்றார். (எ)

# பாதுகாப்பு செயலாளருடன் இத்தாலி தூதுவர் சந்திப்பு

## இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து முக்கிய பேச்சுவார்த்தை





கொழும்பு, மே 01

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான இத்தாலியத் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக், பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தவுடன் நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த புதிய தூதுவரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றதுடன், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடல் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக, இலங்கை மற்றும் இத்தாலிக்கு இடையிலான நீண்டகாலத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை மற்றும் இத்தாலிக்கு இடையே நிலவும் நீண்டகால நட்புறவு குறித்து தனது பாராட்டுக்களைத் தெரிவித்த தூதுவர் பிராங்கோவிக், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காக இலங்கை அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் உறுதிப்படுத்தினார். (எ)

# திருடனிடம் நகைகளை அபகரித்த பொலிஸ் கான்ஸ்டபிள் சிக்கினார்

மட்டக்களப்பு, மே 01

வாழைச்சேனை பகுதியில் வீடு புகுந்து திருடப்பட்ட தங்க நகைகள் மற்றும் பணத்தை, விசாரணை என்ற பெயரில் திருடனிடம் இருந்து பெற்றுத் தன்வசம் வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடு ஒன்றில், கடந்த 21ஆம் திகதி 65 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டன.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், நாவலடி பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட திருடனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி, தற்போது ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், திருடனின் வீட்டுக்குச் சென்றுள்ளார். தான் இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதாகக் கூறி, திருடனிடம் இருந்த நகைகளையும் பணத்தையும் அவர் வாங்கிக் கொண்டுள்ளார்.

பின்னர், அந்தத் திருட்டுப் பொருட்களைத் தனது நண்பர் ஒருவரிடம் பாதுகாப்பாக வைக்குமாறு கொடுத்துள்ளார் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்திலிருந்து விசேட கடமை நிமித்தம் பாசிக்குடா சுற்றுலா மையத்தில் பணியாற்றி வந்த குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை, உதவி பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைய கல்குடா பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து வாழைச்சேனை பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் அவரது நண்பரிடம் இருந்த நகைகளும் பணமும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை வாழைச்சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பெண் மருத்துவர்களை இரகசியமாக வீடியோ எடுத்த 2 இளைஞர்கள் கைது

கொழும்பு, மே 01

கருத்தரங்கு ஒன்றுக்காக வருகை தந்து, நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த பெண் மருத்துவர்கள் சிலர் குளித்துக்கொண்டிருந்த போது, அவர்களை தமது தொலைபேசி மூலம் வீடியோ எடுத்ததாக சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 19 வயதுக்குட்பட்ட தேசிய கிரிக்கெட் அணியின் உறுப்பினர்கள் என்று நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் பெண்களை மட்டுமன்றி, ஆண்களின் வீடியோ காட்சிகளையும் இவ்வாறு எடுத்ததாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு எடுக்கப்பட்ட காட்சிகள் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதா என்பது குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்ட இருவரும் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், தலா 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செம்மணி அகழ்வை...

மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஸ்கான் பரிசோதனையில் என்புத் தொகுதிகள் இருக்கலாம் என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களிலேயே தற்போது மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது ஸ்கான் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மனித என்புத் தொகுதிகளை முழுமையாக அகழ்ந்து எடுத்த பின்னர், ஏனைய இடங்களில் மனித எச்சங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதற்காக மீண்டும் ஒருமுறை ஜி.பி.ஆர். ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தப் புதிய பரிசோதனையின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே அகழ்வுப் பணிகளின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும்." - என்றார். (அ)

## செம்மணி மனித...

சுத்தம் செய்யப்ப ட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள் ளது.

அதேவேளை நேற்று முன் தினம் புதன்கிழமை அகழ்வுப் பணிகளின் போது சந்தேகத்திற்குரிய வகையில் புதைகுழிக்குள் கறுப்பு நிற மண் காணப்பட்டமையால், அவற்றை அரித்து எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் போது அதனுள் இருந்து ஒரு நாணயக்குற்றி மீட்கப்பட்ட நிலையில், அது சான்று பொருளாக அடையாளப்படுத்தி பாதுகாக்கப்பட்டுள்ளது.

இன்று விடுமுறை நாள் என்பதால் அரை நாள் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## கிளிநொச்சியில்...

கொட்டகை தூக்கி எறியப்பட்ட நிலையில், வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறிகள் அனைத்தும் மழையில் நனைந்தமையால், விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, வியாபாரிகள் கவலை வெளியிட்டனர். (அ)

## என்.பி.பியின்...

குறித்து அவர் கடும் கண்டனம் வெளியிட்டார்.

"நல்லதைச் சொல்லிக்கொடுக்க வேண்டியவர்களே 110 கோடி பெறுமதியான போதைப்பொருளைக் கடத்தி வந்து ஒரு சந்ததியையே அழிக்க முற்படுகின்றனர். பரந்தன் பகுதியில் அண்மையில் போதைப்பொருள் காரணமாக ஒரு இளைஞர் உயிரிழந்துள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் எமது இனத்தை அழிப்பதற்கே வழிவகுக்கும்."

ஜனாதிபதி அநுரவின் அண்மைய யாழ்ப்பாணம் விஜயம் குறித்தும் அவர் விமர்சித்தார்.

"அநுர ஆட்சிக்கு வந்தால் மாற்றம் வரும் எனச் சிலர் பேசினார்கள். ஆனால் ஒன்றரை வருடங்கள் கடந்த பின்னரும் எந்த மாற்றமும் இல்லை. வலிகாமம் வடக்கில் அவர் கையசைத்து நடந்ததை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். உண்மையில் 'உங்களுக்குக் காணி தரமாட்டேன், அமைதியாக இருங்கள்' என்று சொல்லியே அவர் கை காட்டினார்." - என்றார்.

இனவாதத்தைச் சொல்லி தமிழர்களை அழிப்பதிலும், பணம் உழைப்பதிலும் மட்டுமே ஆட்சியாளர்கள் குறியாக உள்ளனர் என்றும் சிறீதரன் எம்.பி. தனது உரையில் மேலும் சுட்டிக்காட்டினார்.

## கனடா நாட்டு...

தற்காலிகமாக தங்கியிருந்துள்ளார்.

வவுனியா நகர் நோக்கி வாடகை வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனை அவதானித்த வாகனச் சாரதி, உடனடியாக அவரை பட்டானிச்சூர் பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதித்துள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே, சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவரின் சடலம் தற்போது உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணத்திற்கான துல்லியமான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## ரஷ்ய சுகாதார...

அத்துடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தையும் ரஷ்ய தூதுக்குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

தமது விஜயத்தின் இரண்டாவது நாளான மே 4 ஆம் திகதி, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் ஆகியவற்றிற்கு ரஷ்ய சுகாதார அமைச்சர் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் முக்கிய அங்கமாக, மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் விநியோகம், விசேட மருத்துவப் பயிற்சி மற்றும் மாணவர் பரிமாற்றத் திட்டங்கள் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கையெழுத்திடப்படவுள்ளன.

# திறைசேரியிலிருந்து நிதி மாயம் உதவி பணிப்பாளர் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, மே. 01

திறைசேரியின் 2.5 மில்லியன் டொலர் மாயமான சம்பவம் தொடர்பில் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நிதியமைச்சின் 4 அதிகாரிகளில் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

நிதியமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உதவி பணிப்பாளராக செயற்பட்ட ரங்க ராஜபக்ஷ என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளியாப்பிட்டிய பகுதியில் உள்ள அவரது வீட்டின் பின்புறப் பகுதியில், இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவரது உடலில் வெட்டு காயம் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதனால் அவர் கொலை செய்யப்பட்டாரா? அல்லது தற்கொலை செய்துக்கொண்டாரா? மற்றும் இது ஒரு அனர்த்தமா என்ற கோணத்தில் விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

2.5 மில்லியன் அமெரிக்க டொலர் ஹெக்கர்களால் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், இவருடன் சேர்த்து நான்கு அதிகாரிகளைப் பணியிடை நீக்கம் செய்ய நிதி அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதேவேளை, இச்சம்பவம் குறித்து வாக்குமூலம் அளிப்பதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு இரண்டு தடவைகள் இந்த அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவில்லை.

ரங்க ராஜபக்ஷ குளியாப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவனும், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பழைய மாணவனும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

மேலும், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சுகாதாரச் சுற்றுலாத் துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இதன்போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## அராலியில்...

வருகிறார். நேற்று வெளிநாட்டில் உள்ள பிள்ளைகள் பலதடவைகள் அவருக்கு அழைப்பு மேற்கொண்ட போதும் அவரை தொடர்புகொள்ள முடியாத நிலையில் அயலவர்களுக்கு தகவல் வழங்கினர்.

இதன்போது அயலவர்கள் அங்கு சென்று பார்த்த வேளை தீயில் கருகிய நிலையில் அவர் சடலமாக காணப்பட்டார். சடலத்துக்கு அருகாமையில் இரண்டு மண்ணெண்ணெய் கொள்கலன்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று முழுமையாக தீர்ந்திருந்தது.

வீட்டின் உள்ளே உள்ள மின்விசிறியில் கயிறு ஒன்று கட்டப்பட்டு, அறுக்கப்பட்டு காணப்பட்டது.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற வட்டுக்கோட்டை பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (அ-05)

## உழைப்பாளர்களுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உழைப்பாளர்களுக்கு இந்த அரசாங்கம் அநீதி இழைத்து வருகிறது. தொழிற்சங்கங்களை மிதித்து நசுக்கியுள்ளது. ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையை வைத்தே இந்த அரசாங்கம் ஆட்சியைப் பிடித்தது. ஆனால் இன்று தொழிற்சங்கங்களுக்கு ஒரு பிரச்னை என்றால் அவர்களை அடித்துத் துரத்தும் அளவுக்கு இந்த அரசாங்கம் மாற்றமடைந்துள்ளது. எனவே உழைப்பாளர்களுக்காக குரல் கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை. எதிர்க்கட்சியில் இருக்கும்போது உழைப்பாளர்களுக்காக இவர்கள் குரல் கொடுத்தனர். ஆனால் அதிகாரம் கிடைத்தவுடன் அவர்களை புறக்கணித்துவிட்டனர். இம்முறை மே தினம் பௌர்ணமி நாளுடன் இணைந்து வருவதால், பௌத்த நாடு என்ற ரீதியில் மத வழிபாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியமாகும். திறைசேரியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டியது கட்டாயம். பிறிதொரு நபரின் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்துவிட்டு தெரியாது என்று கூற முடியாது. முன்பு இவர்கள் நகைச்சுவையாக நினைவில்லை என்றார்கள். ஆனால் தற்போது தெரியாது என்கிறார்கள். நிதியமைச்சின் செயலாளர் பதவி என்பது அரசியல் நியமனமாகும். அரச நிர்வாக துறையில் அனுபவம் பெற்று வந்த நியமனம் அல்ல... அரசாங்கத்தின் பிரதி அமைச்சராக இருந்தவரை நிதியமைச்சின் செயலாளராக ஜனாதிபதி நியமித்தார். எனவே இது அரசியல் நியமனமாகும். இது ஹெக்கரின் செயற்பாடு என்று இவர்கள் கூறி தப்பிக்க முடியாது. உகண்டாவில் பணம் இருப்பது போலதான் இவர்கள் கூறும் கதையும். பொய் கூறி ஆட்சிக்கு வந்த இவர்கள் மக்களின் பணத்தை சூறையாடிவிட்டு, மோசடி செய்துவிட்டு அதை மறைப்பதற்காக மற்றுமொரு பொய்யை கூறுகின்றனர். எனவே தனக்கு தெரியாது என்று கூறி நிதியமைச்சின் செயலாளர் கையை கழுவிக் கொள்ள முடியாது. அவரே இதற்கு பொறுப்பு-என்றார்.

## அரசியல்...

இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மே தின தினத்தை முன்னிட்டு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தொழிலாளர் நலனை உறுதிப்படுத்த பல்வேறு சட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அவை வெறும் அரசியல் வாக்குறுதிகளாக அல்லாமல் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, இலங்கையின் பொருளாதார முதுகெலும்பாக விளங்கும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க சம்பள உயர்வு, நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்திற்கு நீதி வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட படிமுறையாகும்.

தலைமுறைகள் கடந்தும் உழைத்த அந்த மக்களின் குரல் இறுதியில் கேட்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது இந்த அரசின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகும்.

அதேபோல், நாட்டின் அந்நியச் செலாவணியின் முதுகெலும்பாக விளங்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவர்களின் குடும்பங்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. கடற்றொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கையும் மறக்கப்படவில்லை. கடலில் போராடும் அந்த உழைப்பாளிகளின் வாழ்வாதாரம், தொழில் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்களை மேம்படுத்தும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் மே தினம், வெறும் நினைவுநாளாக அல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் ஒலிக்கும் போராட்ட மேடையாக அமையவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியால் நாடு முழுவதும் 21 இடங்களில் மே தினக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மற்றும் வன்னி நிலப்பரப்பில் நடைபெறவுள்ள கூட்டங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. கடந்த காலங்களில் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராடியபோது, அவர்களை துப்பாக்கிச் சூடு, தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டுகள் மூலம் ஒடுக்கியவர்கள் இன்று தொழிலாளர் நலன் குறித்து பேசுவது மிகப் பெரிய பரிகாசமாகும்.

அன்று தொழிலாளர்களின் குரலை அடக்கத் தோட்டாக்களைப் பயன்படுத்தியவர்கள், இன்று தம்மை மீட்பர்களாக காண்பிக்க முற்படுகின்றனர். இத்தகைய போலி வேடங்களுக்கு மக்கள் இடமளிக்கக் கூடாது.

அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி, உண்மையான தொழிலாளர் விடுதலையை நோக்கி அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றுள்ளது. (அ)

## ஆஸாத் மௌலானாவை...

தற்போது வெளிநாட்டில் வசித்து வரும், பிள்ளையானின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானாவிடம் நேரடி விசாரணைகளை முன்னெடுப்பதே இக்குழுவின் முதன்மை நோக்கமாகும்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக அஸாத் மௌலானாவினால் முன்வைக்கப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் திடுக்கிடும் வெளிப்படுத்தல்கள் குறித்து மேலதிக விளக்கங்களையும், விரிவான வாக்குமூலங்களையும் அதிகாரிகள் கோரி வருகின்றனர்.

சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்தப் புலனாய்வு முயற்சியானது, தாக்குதல்களின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகளை அடையாளம் காண்பதற்கான ஒரு முக்கிய நகர்வாகக் கருதப்படுகின்றது.

இருப்பினும், இந்த இரகசியப் பயணம் மற்றும் விசாரணைகள் குறித்துக் குற்றப் புலனாய்வுத் திணைக்களமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ இதுவரை அதிகாரபூர்வமான தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் வாழும் நகர்ப்புற மக்களில் 30 வீதமானோருக்கு "கொழுப்பு கல்லீரல்"!

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே. 01

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, நாட்டின் நகர்ப்புற மக்களில் சுமார் 30 முதல் 32 வீதமானோர் கொழுப்பு கல்லீரல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பதுளை போதனா மருத்துவமனையின் இரைப்பை குடல் விசேட மருத்துவ நிபுணர் பியல் ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார்.

கிராமப்புற மக்களுடன் ஒப்பிடும்போது நகர்ப்புற மக்களிடையே இந்தப் பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் அன்றாட உடல் உழைப்பு குறைதல் ஆகியவையே இதற்குக் காரணம் என மருத்துவர் ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு, கம்பஹா போன்ற நகரங்களில் இதன் தாக்கம் அதிகமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான நோயாளிகள் தற்செயலாகவே இந்த நோயைக் கண்டறிகின்றனர். வேறு நோய்களுக்காக மருத்துவரை நாடும்போது அல்லது வயிற்றுப் பகுதியை ஸ்கான் செய்யும்போது கொழுப்பு கல்லீரல் பாதிப்பு இருப்பது தெரியவருகிறது.

கல்லீரலில் அதிகப்படியான கொழுப்பு படிவது நீரிழிவு மற்றும் உடல் பருமன் போன்ற தொற்றாத நோய்களுடன் நெருங்கிய தொடர்புடையது.

இதேவேளை, எம்பிலிபிட்டிய மாவட்ட பொது மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தனுஷி ஆர்.அபேநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், காஸ்ட்ரைடிஸ் எனப்படும் வயிற்றுப் புண் பாதிப்பை ஆரம்பத்திலேயே கண்டறிவது அவசியம் என்றார்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை, முறையான மருந்துகள் மற்றும் பாதிப்பை அதிகரிக்கும் உணவுகளைத் தவிர்ப்பதன் மூலம் இந்நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## தொலைத்தொடர்பு சேவைகளின் தரத்தை மேம்படுத்த புதிய சுயாதீனக் கட்டமைப்பு!

கொழும்பு, மே. 01

கையடக்கத் தொலைபேசி மற்றும் நிலையான தொலைபேசி சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, இவ்வருட இறுதிக்குள் புதிய சுயாதீன ஒழுங்குமுறை முறைமையொன்றை நிறுவ இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள கண்காணிப்பு முறைகளில் மாற்றங்களைச் செய்து, நுகர்வோருக்குச் சிறந்த சேவையை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இது குறித்து இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், எயார் வைஸ் மார்ஷல் பண்டார ஹேரத் தெரிவிக்கையில்,

தற்போது தொலைத்தொடர்பு இணைப்பு மற்றும் அதன் தரம் குறித்த தரவுகளைப் பெறுவதற்கு, சேவை வழங்கும் நிறுவனங்கள் வழங்கும் தகவல்களையே ஆணைக்குழு முழுமையாக நம்பியிருக்க வேண்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

புதிய முறைமையின் ஊடாக, சேவை வழங்குநர்களின் தரவுகளுக்கு அப்பால், ஆணைக்குழு நேரடியாகவும் சுயாதீனமாகவும் சேவையின் தரத்தைக் கண்காணிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை ஏப்ரலில் வீழ்ச்சி!

கொழும்பு, மே. 01

இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் 117,893 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, இந்தியாவிலிருந்து 35,862 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 9,585 சுற்றுலாப் பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து 9,142 பேரும் சீனாவிலிருந்து 8,543 பேரும் ரஷ்யாவிலிருந்து 6,172 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (அ)

## வடக்கு ரயில் சேவை தாமதம்

வவுனியா, மே. 01

யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த ரயில் ஒன்று, வவுனியா - புளியங்குளம் பகுதியில் திடீர் இயந்திரக் கோளாறுக்குள்ளாகியது.

இந்த இயந்திரக் கோளாறு காரணமாக வடக்கு மார்க்கத்திலான ரயில் சேவைகள் தாமதமடைந்ததாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயிலின் இயந்திரக் கோளாறைச் சீர் செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக ரயில் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் அசங்க சமரசிங்க தெரிவித்தார். (அ)

# பிக்மி, ஊபர் ஓட்டுநர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதி சலுகை?

கொழும்பு, மே. 01

நாட்டில் தற்போது உருவாக்கப்பட்டு வரும் விரிவான சமூகப் பாதுகாப்பு கொள்கையின் கீழ், ஊபர் மற்றும் பிக்மி போன்ற செயலி வழிப் போக்குவரத்து மற்றும் விநியோக சேவைகளில் ஈடுபடும் பணியாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தத் திட்டத்தின் ஊடாக, குறித்த பணியாளர்களின் பணிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், அவர்களின் ஓய்வுக்கால வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான சலுகைகளை வழங்கவும் தொழில் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது குறித்து தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவிக்கையில்-

செயலி வழிப் பணியாளர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் முறையான "தொழில் வழங்குநர் - பணியாளர்" உறவுநிலை சட்ட ரீதியாகத் தெளிவாக இல்லாதபோதும், அவர்களை ஒரு சமூகப் பாதுகாப்பு வலையமைப்பிற்குள் கொண்டு வருவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இவ்வாறான பணியாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது உலகளாவிய ரீதியில் விவாதிக்கப்படும் ஒரு விடயமாகும்.

பொதுவாக ஒரு பணியில் சேரும்போது வழங்கப்படும் நியமனக் கடிதம், கடமைக்கு வரும் மற்றும் செல்லும் நேரத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற காரணிகளைக் கொண்டே ஒரு பணி உறவு தீர்மானிக்கப்படுகிறது.

எனினும், செயலி வழிப் பணிகளில் இவ்வாறான கட்டுப்பாடுகள் இல்லாத சூழலிலும் இவர்களுக்கான உரிமைகளை வழங்க அரசாங்கம் முன்னுரிமை அளிக்கிறது.

இந்த வேலைத்திட்டத்தில் ஊபர் மற்றும் பிக்மி போன்ற நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அந்த நிறுவனங்களுடன் அமைச்சின் மட்டத்தில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிறுவனங்களின் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள தரவுகளின்படி, குறித்த செயலிகளில் பணியாற்றுபவர்களில் 60 வீதமானோர் ஏனைய தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டே பகுதிநேரமாக இந்தப் பணிகளைச் செய்கின்றனர். எஞ்சிய 40 வீதமானோர் இதனை முழுநேரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

முழுநேரப் பணியாளர்களாக அடையாளம் காணப்படும் 40 வீதமானோரைத் தனியாக வகைப்படுத்தி, அவர்களை முறையான சமூகப் பாதுகாப்பு முறைமைக்குள் இணைக்க அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார். (அ)

## சரண குணவர்தன மீதான வழக்குகளின் தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, மே. 01

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நான்கு வழக்குகளின் தீர்ப்பை மே மாதம் 26ஆம் திகதி வரை ஒத்திவைத்து மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு தேசிய லொத்தர் சபையின் தலைவராக கடமையாற்றியபோது அந்தச் சபைக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டதில் அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியமைக்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் இந்த நான்கு வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ)

## மாணவிகளின் சீருடையில் சிவப்பு மை தெளித்த பாடசாலை ஆசிரியர் கைது!

கொழும்பு, மே. 01

காலிப் பகுதியிலுள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் பணி புரியும் ஆசிரியர் ஒருவர், வீதியில் சென்ற மாணவிகளின் வெள்ளை நிறச் சீருடைகளில் சிவப்பு மை தெளித்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் குறித்த சர்வதேசப் பாடசாலையில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே ஆசிரியராக பணியில் இணைந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

காலியில் சாரேவன்துக்கடை சந்தியில் வைத்து, அங்கு சென்ற பல மாணவிகளின் சீருடைகளின் பின்புறத்தில் இவர் சிவப்பு மை தெளித்துள்ளார்.

இந்தச் செயல் அங்கிருந்த சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளது. குறித்த காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளி யாகிப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

சமூக ஊடகங்களில் பரவிய காணொளி மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவல்களின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த காலி பொலிஸார், சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். (அ)

## 'டித்வா' வீடமைப்புத் திட்டங்களை விரைவுபடுத்த ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, மே. 01

"டித்வா" சூறாவளியினால் பாதிக்கப்பட்டு இன்னும் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்காக, மே மாத இறுதிக்குள் தற்காலிக வீடுகளைக் கட்டி முடிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில் இந்த விசேட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது மூன்று மாவட்டங்களை மையப்படுத்தி சுமார் 20 பிரதான தற்காலிக முகாம்கள் செயற்பட்டு வருகின்றன. சூறாவளி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த சுமார் 500 குடும்பங்கள் தற்போது இந்த முகாம்களில் தங்கியுள்ளனர்.

முகாம்களில் உள்ள மக்களின் அன்றாட சிரமங்களைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கான தற்காலிகக் குடியிருப்பு வசதிகளை மே மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்-என்றார். (அ)

## ரணிலுக்கு எதிரான வழக்கு விசாரணையின் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு!

கொழும்பு, மே. 01

அரச நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைபாடு தொடர்பான விசாரணையின் முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் ஜூலை மாதம் 08 ஆம் திகதி மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

அதற்கமைய, ஜூலை மாதம் 08 ஆம் திகதிக்கு முன்னர் சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முறைபாட்டாளர் சார்பில் மன்றில் முன்னிலையாகிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் அறிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி மைத்ரி விக்கிரமசிங்கவை, இந்த வழக்கில் சந்தேக நபராக பெயர் குறிப்பிட முடியுமா என்ற விடயம் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் திலீப பீரிஸ் நீதிமன்றத்துக்கு தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பா[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.05.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media